மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (5-10-2025) சைதை தொகுதியில் அன்பு கரங்கள் திட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள (தந்தை தாய் இழந்த மற்றும் ஒற்றை பெற்றோருடைய) குழந்தைகள் மற்றும் பெற்றோர்கள் 300 பேருக்கு ஒரு நாள் சுற்றுலா வின் முதல் நிகழ்வாக 300 பேருக்கும் சிற்றுண்டி வழங்கி அங்கிருந்து 300 பேரும் வேன் மூலம் வடபழனியில் உள்ள கமலா திரையரங்கில் காலை 10.00 மணிக்கு இட்லி கடை " திரைப்படம் சிறப்பு காட்சிக்கு அழைத்துச் சென்றார். உடன் பகுதிச் செயலாளர்கள் மண்டல குழு தலைவர்கள் எம். கிருஷ்ணமூர்த்தி, இரா. துரைராஜ், வட்ட கழக செயலாளர் எஸ்.பி. கோதண்டம் மற்றும் பலர் உள்ளனர்.

'அன்புக்கரங்கள்' திட்டத்தில் பயன்பெறும்

சைதை தொகுதியில் உள்ள 300 குழந்தைகளுடன் ஒருநாள் சுற்றுலா!

குழந்தைகளுக்குப் பிடித்த உடைகளை வாங்கித் தந்து - இனிப்புகள் வழங்கி - அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழி அனுப்பினார்!

சென்னை, அக்.6- முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட அன்புகரங்கள் திட்டத்தில் சைதாப்பேட்டை தொகுதியில் உள்ள 300 குழந்தைகளுடன் ஒரு நாள் சுற்றுலாவுக்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப் பிரமணியன் ஏற்பாடு செய்தார்.

நேற்று முழு நாள் குழந்தைகளுடன் காலை சிற்றுண்டி சாப் பிட்டு 'இட்லி கடை' திரைப்படம் சிறப்பு காட்சி பார்த்து தியாகராயர் நகர் துணிக்கடையில் அவர்களுக்குப் பிடித்த உடைகளை வாங்கி தந்து இனிப்புகள் வழங்கி வழி அனுப்பினார்.

முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் அனைத்து தரப்பினரும் பயனடைகிற வகையில் பல்வேறு வகையான சிறப்புக்குரிய திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில் தமிழ்நாட்டில் மனிதநேய திட்டங்கள் இந்தியாவில் மட்டுமல்ல, உலக அளவில் முன்னுதாரணமாக இருந்து வருகிறது. தாயுமானவர் திட்டத்தில் 20 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் வயது மூத்தோர் மாற்றுத்திறனாளிகளுக்கு வீடுகளுக்கே சென்று உணவுப் பொருள்கள் வழங்குகிற திட்டம் முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

அதைத்தொடர்ந்து அந்த தாயுமானவர் திட்டத்தில் அன்புக் கரங்கள் எனும் பெயரில் கடந்த செப்டம்பர் திங்கள் 15ஆம் தேதி முதலமைச்சர் அவர்களால் சீரிய திட்டம் ஒன்று செயலாக்கம் பெற்றது. தமிழ்நாட்டில் பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகள், பெற்றோரில் ஒருவரை மட்டும் இழந்த குழந்தைகள் ஆகியோருக்கு பாதுகாப்பு மற்றும் கல்விக்கான உதவி என்கிற வகையில் அன்பு கரங்கள் என்ற திட்டத்தை தொடங்கி வைத்தார்.

பெற்றோரில் இருவரையும் இழந்த குழந்தைகளுக்கு மாதம் தோறும் 2000 தந்து, அந்த குழந்தையின் 18 வயது வரை பயன்பெறும். 18 வயதிற்கு பிறகு மேற்படிப்பு உயர்கல்விக்கு தமிழக அரசு திட்டமிட்டு இருக்கிறது என்கிற வகையிலேயும் சிறப்புக்குரிய திட்டத்தை தொடங்கினார்கள்.

அந்தத் திட்டத்தின் படி 6082 குழந்தைகளுக்கு மாதந்தோறும் 2000 வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக சைதாப்பேட்டையில் 24-9-2025-இல் முகாம் ஒன்று நடத்தப்பட்டது. சைதாப்பேட்டையை சுற்றிலும் இருக்கிற இரண்டு பெற்றோரையும் இழந்த குழந்தைகள், பெற்றோரில் ஒருவரை மட்டும் இழந்த நிலையில் அரசு விதிமுறையின்படி அந்த பெற்றோரால் வேலை எதுவும் செய்ய இயலாத நிலையில் சிறையில் இருப்பது, அல்லது நீண்ட நாள் நோய்வாய்ப்பட்ட நிலையில் இருப்பது, இது போன்ற பல்வேறு காரணங்களினால் அந்த பெற்றோரில் ஒருவருக்கும் வருமானம் இல்லாமல் போயிருந்தால், இந்த ஒரு பெற்றோரை இழந்த குழந்தைக்கும் நிதி உதவி வழங்கப்படும் என்கிற வகையில் அறிவிப்பு வெளியானது. அந்த வகையில் சைதாப்பேட்டையில் அன்பு கரங்கள் முகாம் நடத்தப்பட்டது. அந்த முகாமில் பெற்றோரில் இருவரையும் இழந்த 68 குழந்தைகளும், பெற்றோரில் ஒருவரை மட்டும் இழந்த 331 பேரும் ஆக மொத்தம் 399 குழந்தைகளும் விண்ணப்பித்திருந்தனர். அந்த விண்ணப்பங்களை எல்லாம் வட்டாட்சியர் அவர்கள் நாளைக்கு நாளை மறு நாளோ அவரது வீடுகளுக்குச் சென்று ஆய்வு மேற்கொண்டு உண்மைத் தன்மையைக் கண்டறிந்து அவர்களுக்கு மாதம் தோறும் 2000 வழங்கும் பயனாளிகளை சேர்க்க இருக்கிறார்கள்.

அந்த வகையில் நேற்று காலை சட்டமன்ற அலுவலகத்திற்கு 8 மணிக்கு எல்லாம் வரத் தொடங்கினார்கள். சைதாப்பேட்டையில் காலை சிற்றுண்டி முடித்த பிறகு அவர்களை எல்லாம் பத்து மணி அளவில் திரையரங்குகளில் நன்றாக ஓடிக் கொண்டிருக்கிற மனித உறவுகளைப் பற்றிய கதையான இட்லி கடை என்ற திரைப்படத்திற்கு அழைத்துச் சென்றோம். அந்தக் குழந்தைகள் மிக மகிழ்ச்சியோடு அந்த திரைப்படத்தை ரசித்தார்கள். அந்தக் குழந்தைகள் அனைவரோடும் தியாகராயர் நகரில் இருக்கிற ஒரு துணிக் கடைக்கு அழைத்துச் சென்று புத்தாடைகளைஅந்தக் குழந்தைகளை தேர்ந்தெடுக்கிற வகையில் ஏற்பாடு செய்யப்பட்டு தற்போது இல்லம் திரும்பிச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

அந்த வகையில் 'அன்புக் கரங்கள்' திட்டத்தில் சைதாப் பேட்டையில் நடைபெற்ற முகாமில் தேர்வு செய்த தோடு மட்டுமல்லாது குழந்தைகளுடன் ஒரு நாள் மகிழ்ச்சியாகவும், நேரத்தைச் செலவிட்டது என்பது மிகப் பெரிய மகிழ்ச்சி ஆக இருந்தது. இந்தத் திரைப்படத்தை பார்த்துவிட்டு நாம் வந்த பிறகு நடிகர் தனுஷ் அவர்கள் அவருடைய சொந்த கிராமத்திலிருந்து என்னைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இந்த 'இட்லி கடை' படத்திற்கு ஏறக்குறைய 300 குழந்தைகளை அழைத்து வந்த செய்தி அறிந்து நன்றி தெரிவித்தார். நானும் அவருக்கு இந்த திரைப்படத்தின் வெற்றிக்கு பாராட்டுகளை தெரிவித்தேன். பெற்றோர்களை இழந்த குழந்தையின் மனநிலை பலருக்குத் தெரியும். அந்த வலியை அனுபவித்தவர்களில் நானும் ஒருவன். எனக்கு ஐந்தாறு வயது இருக்கும்போதே தாயை இழந்தவன் நான். தமக்கையின் அரவணைப்பிலும் தந்தையின் அன்பிலும் வளர்ந்தவன். பெற்றோரில் ஒருவரை இழந்த குழந்தைக்கு என்ன மாதிரியான வலி இருக்கும் என்பதை உணர்ந்தவன் என்கிற வகையில் இந்த குழந்தைகளோடு இன்று ஒரு நாள் செலவிட்டது என்பது மனதிற்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது.

இவ்வாறு அமைச்சர் குறிப்பிட்டார்.

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பங்கேற்பு! வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் தலைமையில்

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பாக ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம்!

துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி சிறப்புரை!

திருவள்ளூர் அக் 06

தலைமைக் கழக அறிவிப்புக்கிணங்க பாக ஒருங்கிணைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்கான வாக்குச்சாவடிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்களோடு நியமிக்கப்பட்டுள்ள பாக ஒருங்கிணைப்பாளர்கள் (Booth Co ordinators) இணைந்து தேர்தல் பணிகளை முன்னெடுப்புகள் குறித்து கலந்துரையாடல் கூட்டம் கவரைப்பேட்டையில் அமைந்து ள்ள SVK திருமண மண்டபத்தில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்எஸ்கே ரமேஷ் ராஜ் தலைமையில் நடைபெற்றது. இதில் ஒன்றிய கழகச் செயலாளர் கி. வே.ஆனந்த் குமார் வரவேற்புரை ஆற்றினார்

இதில் கழகத் துணை பொதுச்செயலாளர் மண்டல பொறுப்பாளரும் ஆ.ராசா. எம்.பி. சிறுபான்மை யினர் நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி.சா.மு. நாசர் ஆகியோர் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்கள்

அப்போது ஆ ராசா எம்பி பேசுகையில்

2026இல் வரவுள்ள சட்டமன்ற தேர்தல் என்பது இந்தியாவின் அரசியல் சட்டத்தை பாதுகாக்க கூடிய தேர்தல் எனவும், இந்தியாவையும், தமிழ்நாட்டையும், அரசியல் சட்டத்தையும் பாதுகாக்க கூடிய தேர்தல் என்றும்

நம் நாட்டில் உணவு, உடை, கலாச்சாரம் அனைத்தும் வேறு வேறு, ஆனால் ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே தேர்தல் என பாஜக முயற்சி செய்து வருகிறது எனவும் அரசியல் சட்டத்தை எடுக்க தான் பாஜக முயற்சி செய்து வருகிறது எனவும் ஆகையால் திமுக நிர்வாகிகள் இந்த தேர்தலை எச்சரிக்கையாக எதிர்கொள்ள வேண்டும் எனவும் கழக தலைவர் தளபதி அவர்கள் கூறுவது போல் இருநூறு வெல்வோம், வரலாறு படைப்போம், என அனைவரும் சூளுரைக்க வேண்டும் எனவும் நிர்வாகிகளிடம் கேட்டுக் கொண்டார்

இந்நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ,

பி.ஜெ.மூர்த்தி, தொகுதி பார்வையாளர்: சுரேஷ்செல்வராஜ், கவிகணேசன், மாவட்ட அவைத்தலைவர் மு.பகலவன் நிர்வாகிகள் சி.எச்.சேகர், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, மு.கதிரவன், எம்.எல்.இரவி, எஸ்.ரமேஷ், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், வெ.அன்புவாணன், ஜி.ஸ்டாலின், ஏ.கே.சுரேஷ், எம்.ஜி.ராபட்ராஜ்துரை, பொதுக்குழு உறுப்பினர்கள்: கே.சுப்பிரமணி, பா.செ.குணசேகரன், பி.வெங்கடாசலபதி, டாக்டர்.பரிமளம் விஸ்வநாதன், ஏ.வி.ராமமூர்த்தி ஒன்றிய நகர, பேரூர் கழக செயலாளர்கள்: டி.கே.சந்திரசேகர், மு.மணிபாலன், ந. பரிமளம், நா.செல்வசேகரன், ஆ.சத்தியவேலு, மு.முரளிதரன், ஜான்(எ)பொன்னுசாமி, ஆ.ராஜா, ஏ.ஆர்.டி.உதயசூரியன், வே.ஆனந்தகுமார், கா.சு.ஜெகதீசன், ஜி.இரவிக்குமார், அபிராமி குமரவேல், இரா.அறிவழகன், கா.சு.தமிழ்உதயன், பி.முத்து மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதி பாக ஒருங்கிணைப்பாளர்கள் (Booth Coordinators) கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்

வண்டலூர் - அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் - இரவு தங்குமிடம் திரும்பாத

'ஷெரியார்' - 5 வயது சிங்கம் தொடர்ந்து கண்காணிப்பு!

சஃபாரி பகுதிக்குள் சிங்கத்தின் இருப்பை உறுதிப்படுத்திய வனத்துறை!

வண்டலூர், அக்.6-

வண்டலூர் - அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவின் இயக்குநர் அறிக்கை வருமாறு:-

அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, வண்டலூர், சென்னை வண்டலூர், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில், ஒன்பது சிங்கங்கள் உள்ளன, அவற்றில் ஏழு (மூன்று ஆண் மற்றும் நான்கு பெண்) லயன் சஃபாரியில் பராமரிக்கப்படுகின்றன, இது பார்வையாளர்களுக்கு கிட்டத்தட்ட இயற்கையான அனுபவத்தை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவற்றில், ஜோடி சிங்கங்கள் சங்கர் மற்றும் ஜெயா சமீப காலம் வரை திறந்தவெளி சஃபாரி பகுதிக்கு வழக்கமாக விடப்பட்டன.

2023-ஆம் ஆண்டு பெங்களூரு, பன்னேர்கட்டா உயிரியல் பூங்காவுடன் விலங்கு பரிமாற்றத் திட்டத்தின் மூலம் AAZP க்கு கொண்டு வரப்பட்ட ஷெரியார் (5 வயது) என்ற இளம் ஆண் சிங்கமும் சஃபாரி பகுதிக்குள் தொடர்ந்து விடப்படுகிறது. இருப்பினும், அக்டோபர் 3, 2025 அன்று, சிங்கம் இரவு தங்குமிடத்திற்குத் திரும்பவில்லை, இது சிங்கம் தற்போது சுற்றுச்சூழலை ஆராய்ந்து வருவதைக் குறிக்கிறது, இது ஒரு இளம் சிங்கத்திற்கு இயல்பானது மற்றும் எதிர்பார்க்கப்படும் நடத்தை. விலங்கின் அசைவுகள் உயிரியல் பூங்கா ஊழியர்களால் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன.

சுமார் 20 ஹெக்டேர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ள சிங்க சஃபாரி பகுதிக்குள் சிங்கத்தின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதி செய்வதற்காக, ஐந்து பிரத்யேகக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. முழு சஃபாரி பகுதியும் எல்லைச் சுவர் மற்றும் சங்கிலிஇணைப்பு வேலி மூலம் பாதுகாக்கப்பட்டு, விலங்கு பாதுகாக்கப்பட்ட பகுதிக்குள் இருப்பதை உறுதி செய்கிறது.

மேலும், பகலில் சாதாரண ட்ரோன்கள் மற்றும் இரவில் வெப்ப இமேஜிங் ட்ரோன் மூலம் சிங்கத்தின் பாதுகாப்பிற்காக இந்தப் பகுதி கண்காணிக்கப்படுகிறது. அதோடு, சிங்கத்தின் நல்வாழ்வை உறுதி செய்வதற்காக பத்து கேமரா பொறிகளும் நிறுவப்பட்டுள்ளன.

நடந்துகொண்டிருக்கும் கண்காணிப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கைகளின் போது, மீட்புக் குழுக்கள் சிங்கத்தைக் கண்டுள்ளன, மேலும் கள ஊழியர்களால் கால் தடங்கள் கவனிக்கப்பட்டுள்ளன, இது சஃபாரி பகுதிக்குள் சிங்கத்தின் இருப்பை உறுதிப்படுத்துகிறது.

இதுபோன்ற நிகழ்வுகள் கடந்த காலங்களிலும் நடந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இளம் சிங்கங்கள், இயற்கையாகவே, புதிதாக அறிமுகப்படுத்தப்படும்போது அலைந்து திரிந்து தங்கள் சுற்றுப்புறங்களை ஆராயும். முந்தைய நிகழ்வுகளில், அத்தகைய சிங்கங்கள் இரண்டு முதல் மூன்று நாட்களுக்குள் தங்கள் இரவு தங்குமிடங்களுக்கு பாதுகாப்பாகத் திரும்பியுள்ளன.

சிங்கத்தின் தொடர்ச்சியான ஆரோக்கியத்தையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்காக, சஃபாரி பகுதிக்குள் உணவு மற்றும் தண்ணீருக்கு AAZP நிர்வாகம் போதுமான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. சிங்கத்தின் நல்வாழ்வு மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோவை மாநகர் மாவட்ட க் கழகச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் அறிக்கை!

கோவை, அக். 6 -

கோவை மாநகர் மாவட்டக் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்களுக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் செந்தமிழ்செல்வன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு : -

கோவை மாநகர் மாவட்ட தி.மு.கழக செயற்குழு கூட்டம் நாளை (7.10.2025 செவ்வாய்க்கிழமை) காலை 9.30 மணியளவில் வடகோவை குறுக்கு வெட்டு சாலையில் அமைந்துள்ள மாவட்ட

கழக அலுவலகத்தில் மாநகர் மாவட்ட அவைத்தலைவர், முனைவர் கணபதி ப.ராஜ்குமார் எம்.பி. தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கோவை மாநகர் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமை கழக நிர்வாகிகள், மாநகராட்சி மேயர், பகுதி கழக பொறுப்பாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்க வேண்டும் என்று தங்களை கேட்டு கொள்கிறேன்.

பொருள் : 1. கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் கோவை வருகை குறித்து, 2. கழக ஆக்க பணிகள் குறித்து,

இவ்வாறு கோவை மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை. செந்தமிழ்செல்வன் தெரிவித்துள்ளார்.

தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் வடக்கு பகுதி 50 ஆவது வட்ட திமுக சார்பில் கழக செயல் வீரர்கள் கூட்டம் மேற்கு தாம்பரம் காந்தி ரோட்டில் அமைந்துள்ள எஸ்.ஜி.எஸ் திருமண மண்டபத்தில் அவை தலைவர் இ.நடராஜ் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தாம்பரம் மாநகரச் செயாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ, தொகுதி பார்வையாளர் பரிதி இளம் சுருதி, பெருங்களத்தூர் வடக்கு பகுதி கழக செயலாளர் 4,வது மண்டல குழுத்தலைவர் டி.காமராஜ் டி.ஆர்.கோபி எம்.சி. கலந்து கொண்டனர்.

தாம்பரம் மாநகரம் - பெருங்களத்தூர் 50 ஆவது வட்டக் கூட்டம்!

எஸ். ஆர்.ராஜா எம்.எல்.ஏ. – பரிதி இளம்சுருதி பங்கேற்பு!

தாம்பரம், அக். 6 -

தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் வடக்கு பகுதி 50 ஆவது வட்ட தி.மு.க. சார்பில் கழக செயல் வீரர்கள் கூட்டம் மேற்கு தாம்பரம் காந்தி ரோட்டில் அமைந்துள்ள எஸ்.ஜி.எஸ் திருமண மண்டபத்தில் அவை தலைவர் இ.நடராஜ் தலைமையில் கூட்டம் நடைபெற்றது இக்கூட்டத்தில் தாம்பரம் மாநகரக் கழக எஸ். ஆர்.ராஜா எம்.எல்.ஏ தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பரிதி இளம் சுருதி எம் சி பெருங்களத்தூர் வடக்கு பகுதி கழக செயலாளர் 4,வது மண்டல குழுத்தலைவர் டி.காமராஜ் ள் பகுதி அவைத் தலைவரும் மாமன்ற கொறடா.டி.ஆர்.கோபி கலந்து கொண்டனர்.

இதில் இறுதியாக மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ பேசுகையில் வருகின்ற 2026 ஆம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்று மீண்டும் கழக தலைவர் தளபதி அவர்கள் தலைமையில் திராவிட மாடல் ஆட்சியை கொண்டு வருவதற்காக நாம் ஒவ்வொரும் சபதம் ஏற்று நமது மன மார்ச்சியங்கறை மறந்து சிறப்பாக பணியாற்றி வெற்றி கனியை தலைவரிடம் ஒப்படைக்க உறுதி ஏற்போம் என சட்டமன்ற உறுப்பினர் எஸ். ஆர்.ராஜா கழக நிர்வாகிகளுக்கு கழக தோழர்களுக்கு அறிவுறையும் ஆலோசனைகளையும் வழங்கினார்.

நிகழ்ச்சில் வட்ட செயலாளர் ஆர்.ஜீவன், மாநகர வர்த்தக அணியின் துணை செயலாளர்.இரா.செல்வகுமார். எக்ஸ்.எம்.சி,பி.காளியப்பன், என். ஷாஜகான், ஆர்.அகஸ்டின்,டி.கே.தாமஸ், கி.வேலுமணி, இரா.விஜயகுமார், பி.சூர்யா, எம்.கல்யாணி, எஸ்.மகேஷ், க.மு.சூரியா, பி.மோகன், பி.மனோகரன், எஸ்.ரா ஜோந்திரன், த.பிரவீன்குமார், பகுதி கழக தகவல் தொழில்நுட்ப அணியின் அமைப்பாளர். எஸ்.செல்வபிரகாஷ், டி.தேவநாதன். கே. பாஸ்கர், டி.ஆனந்தன், ஆர். ஹரிஸ்குமார், வி.வெங்கட், எம்.வினோத், ப.சந்தானம், அருண்குமார் பெ.ஹாரிஸ் இ.நவீன்குமார் மற்றும் மாவட்ட மாநகர பகுதி நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி,மகளிர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், வார்டு BLA2, BDA,BLC என 300,க்கு மேற்ப்பட்ட கழக நிர்வாகிகளும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். அனைவருக்கும் மதிய அறுசுவை உணவு வழங்கப்பட்டது வருகை புரிந்த ஆர்.செல்வகுமார் நன்றி தெரிவித்தார்.

தண்டையார்பேட்டை மற்றும் திரு.வி.க. நகர் மண்டலங்கள், வார்டு45 மற்றும் 71க்குட்பட்ட கணேசபுரம் சுரங்கப்பதையின் மேல் ரூ.226.55 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் புதிய மேம்பாலப் பணிகளைப மேயர் ஆர். பிரியா பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது, பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர், ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், உயர் அதிகாரிகள் டாக்டர் டி.ஜி. வினய், வ. சிவகிருஷ்ணமூர்த்தி, ம.பிரதிவிராஜ், மற்றும் நேதாஜி யு. கணேசன், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.